எல்லோருக்கும் இன்று திருவிழா
ஏழை மக்களுக்கு பெருவிழா
பொல்லாருக்கும் நல்லோருக்கும்
பொழிகின்ற மழைபோல
எல்லோருக்கும் அருள் வழங்கும்
இயேசு பிறந்த திருவிழா



வண்டு வந்து தீண்டாத
செண்பக பூ வாசமதை
தென்பொதிகை தென்றல் என்றும்
சுமந்து செல்லுது – வண்டு வந்து
அன்னை மரி வான்மதியாய்
அன்பு மனம் கதிரவனாய்
மண்ணுலகில் யாவருக்கும்
மகிழ்வை தந்தது
பண்ணிசைத்து நடனம் செய்து
பாட்டு பாடுங்கள்
கண்மணியாம் குழந்தை இயேசு
பாதம் நாடுங்கள்
விண்ணக தந்தையின்
அன்பு மழையில்
மண்ணக மாந்தரின்
நெஞ்சம் மலருது – எல்லோருக்கும்

காரிருளை நீக்குகின்ற
காலை இளம் கதிரவன்போல்
பாவ இருள் போக்க வந்த
உலக ஞாயிறு – காரிருள்
அவர் சொல்லும் மொழி பேரமுது
செல்லும் வழி விண்ணரசு
அவ் வழிதான் யாவருக்கும்
மீட்பு என்பது
பண்ணிசைத்து நடனம் செய்து
பாட்டுப் பாடுங்கள்
கண்மணியாம் குழந்தை இயேசு
பாதம் நாடுங்கள்
விண்ணக தந்தையின்
அன்பு மழையில்
மண்ணக மாந்தரின்
நெஞ்சம் மலருது – எல்லோருக்கும்



# 2006 நத்தார் திருப்பலி



**வருகைப் பாடல்.**

இன்று நமக்காக மீட்பர் பிறந்துள்ளார் – 2
அவரே ஆண்டவர் மெசியாவாம் – 2

ஆண்டவரை பாடுங்கள்
அவர் பெயரை வாழ்த்துங்கள் – 2
அவரை அறியார் நடுவினில்
அவரின் மாட்சியை சொல்லுங்கள் – 2
வயல்வெளி நல்ல மலர்களும்
வாழ்த்தி பாடி மகிழுங்கள் – இன்று

வானங்கள் மகிழட்டும்
வையகம் களிகூரட்டும் – 2
கடலும் அதில் வாழ் அனைத்துமே
களிநடனம் புரியட்டும் – 2
நீதி நேர்மை நிறைந்திடும்
நிலைத்த ஆட்சியை அடையுங்கள் – இன்று





2

**தியானப் பாடல்.**

சரணம் சரணம் குருவே
சரணம் சரணம் பிரபுவே

உன் வாழ்வு என் வாழ்வின்
வழியாக வேண்டும்
இறையேசுவே என்னில் கருவாகவே
அன்பொன்றே என்
வாழ்க்கை துணையாக வேண்டும் – சரணம்

இறைவனை அன்பு செய்து
மனிதனை வெறுத்து – இறைவனை
பொய்யான வழிபாடு
நாம் செய்கிறோம் – பொய்யான
கண்கள் காணும் தெய்வம்
மனிதன் என்று சொல்லுவோம்
அன்பு செய்து வாழுவோம் – சரணம்

ஏர்பூட்டி உழுவாரில்
சரளைக்கல் உடைப்பாரில் – ஏர்பூட்டி
எளியோரில் ஏழையாய்
அவன் வாழ்கிறான் – எளியோரின்
கண்கள் காணும் தெய்வம்
மனிதன் என்று சொல்லுவோம்
அன்பு செய்து வாழுவோம் – சரணம்



**காணிக்கைப் பாடல்**

3

எல்லாம் தருகிறேன் தந்தாய்
என்னையும் தருகிறேன்

இயற்கை தந்த மலர்கள் பறித்தே
தருவேன் உமக்கு காணிக்கை
உழைப்பின் பயனாய் கிடைத்த பொருளை
என்னோடு இணைத்தே தருகிறேன் (2)

பிறருக்காய் வாழ்வதில் நானும்
என்னையே உம்மிடம் தருகிறேன்
பிறரின் சுமையை விரும்பிச் சுமக்க
என்னையும் தகுதியாக்குவாய் (2)

4



**நற்கருணைப் பாடல்**

மண் குளிரும் காலம்
நள்ளிரவின் நேரம்
மன்னவன் பிறந்துள்ளான்
விண்ணகத்தின் கானம்
மண்ணகத்தில் வந்து
மன்னவனை வாழ்த்துதே – மண்

அடிமை விலங்கை
அவனியில் தகர்த்த
இயேசு பிறந்தாரே
உண்மையின் ஒளியை
உலகில் ஏற்ற
தேவன் பிறந்தாரே
உண்மை அன்பு
சாந்தம் கொண்டு
தன்னை தந்தாரே – உண்மை, மண்

மண்ணக வாழ்வில்
விண்ணகம் காண
மன்னவன் பிறந்தாரே
மாந்தரின் நடுவில்
தேவனின் அருளை
கொண்டு வந்தாரே
தந்தையோடு நம்மை சேர்க்க
தரணி வந்தாரே – தந்தையோடு, மண்